WBCL12-1-1-TA

# விட்டு விடுகிறேன்! - ஏன் உங்களால் கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ முடிவதில்லை - நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்**: இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில்: இதுவரைக்கும் எப்போதாது நீங்கள் சொல்லியிருக்கிறீர்களா, "நான் கைவிடுகிறேன்! - என்னால் இந்த கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ முடியாது என்று

**டாக்டர் வேயின் பார்பர்:** ஒருநாள் காலையில் நான் எழுந்ததும், ஜான், உங்ககிட்ட உண்மைய சொல்ல விரும்புகிறேன், அன்னைக்கு எனக்கு கிறிஸ்தவன் என்ற உணர்வே இல்லை. யாராக இருக்கவேண்டும் என்பதில் அதிக கவனம் இல்லாமல் இருந்தேன். அதாவது, அந்த உணர்வோடு தான் நான் கண்விழித்தேன். ஒரு பழங்காலத்து பையன் சொன்னது ஞாபகமிருக்குதா, "தேவனே, நா பேராசப்படல. எனக்கு இச்சையான சிந்தனைகள் இல்லை. னா பொய் சொன்னது கிடையாது, யாரையும் நா ஏமாத்துல, ஆனா இப்ப என்னோட படுக்கையில் இருந்து நா எழுந்திருக்க போகிறேன்."

தேவன்  என்னிடம் செய்யும்படி சொன்ன காரியத்தை செய்ய எனக்கு திறமை இல்லை. இந்த கிறிஸ்தவ வாழ்க்கையை என்னால் வாழ முடியாது. அப்ப எனக்குள் வாழ்கிறவர் என்னை பெலப்படுத்துகிறவராக

இருக்கிறார், அவர் என்னிடம் இருந்து எதிர்பார்க்கிற காரியங்களை நான் செய்யும்படி எனக்கு சத்துவத்தை அளிக்கிறார்.

இப்ப, என்னில் புதிய சுபாவம் இருக்கிறது, நான் கிறிஸ்துவின் சுபாவத்திற்கு பங்குள்ளவனாக இருக்கிறேன். இருந்தாலும் நான் மாம்சத்தோடு போராடி மேற்கொள்ள வேண்டியிருக்கு இந்த யுத்தம் அனைத்தும் கிறிஸ்துவை நமது இருதயத்தில் நாம் ஏற்றுகொண்ட நிமிடத்தில் இருந்து துவங்குகிறது.

இன்றைய எனது விருந்தினர் ஒரு கருத்தரங்கு பேச்சாளர், நூலாசிரியரும் போதகருமான Dr. வேயின் பார்பர், வுட்லாந்து பார்க் பாப்டிஸ்ட் திருச்சபையின் போதகராக இருக்கிறார் சாடாநோகா, டெநீசீ

அவர் நமக்குள் வாசம்பண்ணி நம்மிடம் இருந்து நாம் செய்யவேண்டிய அனைத்தையும் செய்யும்படி சத்துவமளிக்கிறார். அதுதான் நற்செய்தியாக இருக்கிறது. அதுதான் சுவிசேஷத்தின் அழகு தன்மையாகவும் இருக்கிறது. அது இரட்சிப்போடு நின்று விடுவதில்லை. கிறிஸ்து நமக்குள் வந்து வாசம்பண்ண துவங்குகிறார். அவர்தான் நமது நித்திய ஜீவன். அவர்தான் நமது ஜீவன் அதைதான் ஜனங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நீங்க எப்படி அவரை ஏற்றுகொண்டீர்களோ அப்படியே அதில் நடக்கிறவர்களாக இருக்கவேண்டும். அவரை நம்பிடுங்கள்.

ஜான் அன்கேர்பெர்கின் இந்த விசேஷித்த நிகழ்ச்சிக்கு உங்களை அன்போடு வரவேற்கிறோம்.

*****

**டாக்டர். ஜான் அன்கெர்பெர்க்:** நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இன்றைக்கு ஒரு பயங்கரமான விருந்தினர் நம்முடன் இருக்கிறார். அவருடைய பெயர் Dr. வேயின் பார்பர், அவரை எதற்காக அழைத்திருக்கிறேன் என்றால் கிறிஸ்துவத்தில் தொடர்ந்து சபைக்கு செல்லுகிறவர்களாக இருந்தும் கிறிஸ்தவ வாழ்க்கையை எப்படி வாழ்வது என்று தெரியாமல் இருக்கிற கிறிஸ்தவர்களுக்கு உதவிடம் இவர்தான் சரியானவர் என்று நான் நினைத்தேன். அவங்க முயலுகிறார்கள்,. தங்களால் முடிந்த அளவு முயற்சிக்கிறாங்க ஆனா தோற்று போகிறார்கள், சரியா. ஒருவேளை நான் இப்ப உங்களை பற்றி விவரித்து சொல்கிறேன் என நினைக்கிறேன். நீங்க விரக்கிதியோடிருக்கிறீர்கள், சோர்வடைந்து இருக்கிறீர்கள். உங்களுடைய கிறிஸ்தவ வாழ்வில் ஏதோ விடுபட்டு இருக்கிறது. அது எனாவென்று உங்களுக்கு புரிவதில்லை. அதனால நீங்க விட்டுவிடும் கட்டத்தில் இருக்கலாம். அதனாலதான் இன்றைக்கு வேயினை வரும்படி நான் அழைத்தேன்.

இன்றைக்கு நாம ஒரு கேள்வியுடன் துவங்க இருக்கிறோம் இதை கேட்டுகொண்டிருக்கிற அனைவரையும் நான் கவனத்தில் கொண்டு

செயல்பட வேண்டியது அவசியம். உங்களில் அநேகர் பல நாட்களாக நிகழ்ச்சியை பார்த்து வருகிறீர்கள், அப்படியிருந்தும், கர்த்தராகிய இயேசுவை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா என்று எனக்கு தெரியாது? அதனாலதான் இதிலிருந்து துவங்க விரும்புகிறேன், இரட்சிப்பின் அடித்தளங்கள் என்னென்ன? இந்த கிறிஸ்தவ வாழ்வில் எப்படி பங்கு பெற முடியும்? அதற்கான பதில் இதோ, வேயின், உங்களுக்கு அப்ப முப்பத்தி நாலு வயசு, எட்டு வருஷங்களாக யூத் மினிஸ்ட்ரி பண்ணீட்டு இருக்கீங்க. நீங்க ஏற்கனவே ஊழித்தில் தான் இருக்கிறீர்கள் ஆனாலும் நீங்க ஒரு கிறிஸ்தவனாக இல்லை என்கிற காரியத்தை உணர்ந்திருக்கிறீர்கள்.

**பார்பர்:** ஆமா அப்படிதான்.

**ஆன்கர்பெர்க்:** ஒவ்வொரு ஞாயிற்று கிழமைகளிலும் சபைகளுக்கு செல்லுகிற நமது ஜனங்களை குறித்து எனக்கு பயமாக இருக்கிறது. சபைக்கு போகாத கிறிஸ்தவரல்லாத அநேக ஜனங்களும் இருக்கிறார்கள். அவர்கள் நீங்க என்ன சொல்லுகிறீர்கள் என்பதை அறிந்துகொள்ள ஆர்வமாக இருக்கிறார்கள். இரநூறு தேசங்களில் இருக்கும் மக்கள் இதை கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் அறிந்துகொள்ள விரும்புகின்றனர், கிறிஸ்தவம் என்றால் என்ன? அது என்ன வித்தியாசத்தை கொண்டிருக்கிறது? ஆனா முதல்ல உங்களை மாதிரி சபையில் இருப்பவர்களை குறித்து முதலில் நாம் பார்க்கலாம்

என நினைக்கிறேன். நீங்க எந்த விஷயத்தில் பின்னடைவதாக தேவன் உங்களுக்கு காண்பித்தார் என்று சொல்ல முடியுமா? எப்படி உண்மையான கிறிஸ்தவனாக இருக்க முடியும் என்பதை பற்றி நாம் பார்க்கலாம். இதற்கு அடித்தளமாக இருப்பது என்ன?

**பார்பர்:** சரி, என்னுடைய சொந்த அனுபவத்தில், அதாவது, சபை குடும்பத்தில் வளரும் சூழல், உங்களால பாவம் செய்ய முடியும் என்பதை நீங்கள் சீக்கிரம் புரிந்துகொள்வீர்கள். அதுல எனக்கு எந்த சந்தேகமும் இல்லை. ஆனா நான் ஒரு பாவி என்பதை புரிந்துகொள்ளாமல் இருந்தேன். நீங்க நீங்களாகவே இருப்பதினால் நீங்க உங்க விருப்படி செய்கிறீர்கள். அப்பதான் நான் வித்தியாசத்தை பார்க்க ஆரம்பித்தேன். வேதத்தில் சொல்லப்பட்டிருப்பது போல, நாம நற்செய்தியை பற்றி பேச முயலுகிறோம் ஆனா சில தீய செய்திகளும் இருக்கத்தான் செய்கிறது.

அந்த கேட்ட செய்தியில் என்ன நடத்தது என்றால், ரோமர் 5:12ல் சொல்லப்பட்டிருக்கிறது, " இப்படியாக ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது போலவும் எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால் மரணம் எல்லாருக்கும் வந்தது போல இதுவுமாயிற்று." அதிலிருந்து கீழ வந்தா வசனம் பதினெட்டு, "ஆகையால், ஒரே மீறுதலினாலே எல்லா மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானது." இந்த உலகத்தில் இந்த

விஷயம் எப்படி நடந்திருக்க முடியும்? சரி, இது நம்மை ஆதியாகமம் புஸ்தகத்திற்கு அழைத்து செல்கிறது. அங்க பார்க்கும்போது ஆதாம் - ஆதாம் என்று சொல்லப்பட்டிருகிறது, அதாவது, புதிய அமெரிக்க நிலை மொழிபெயர்ப்பில் இரண்டாம் அதிகாரத்தின் இருபதாம் வசனம் இப்படியாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது, அது மனிதனை குறிக்கிறது, ஆனால் இங்கதான் முதன் முதலில் ஆதாம் என்ற வார்த்தையை பார்க்கிறோம் - தேவன் அவரை சிருஷ்டித்தார், அதுதான் முதல் விஷயம். சரி, அது ஒருவேளை சரியில்லை என்பது போல இருக்கலாம், ஆனா வேதாக ரீதியாக அதுதான் சரி.

தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது என்பதை ஜனங்கள் புரிந்துகொள்ளவில்லை. வேதம் சொல்கிறது ஆதியாகமம் 1:26, "பின்பு தேவன், "நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியும் மனிதனை உண்டாக்குவோமாக என்றார். அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்து பறவைகளையும் மிருக ஜீவன்களையும் பூமியனைத்தையும் பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார்." நம்முடைய சாயலாக ஒரு மனிதனை நாம் உண்டாக்கிடலாம். நம்முடைய குனாதிசயத்தின் பிரதிபளிப்பாக இருக்கும்படி மனிதனை உண்டாக்கிடலாம். நம்முடைய வல்லமை தங்கும் ஸ்தலமாக இருக்கும்படி மனிதனை உருவாக்கிடலாம். எல்லாமே நன்றாக இருந்தது.

ஆனா இதுல தேவன் மனிதனுக்கு கொடுத்த நிபந்தனைகளும் இருக்கிறது, அது என்ன நிபந்தனை, இந்த மரங்களை உங்களுக்காக நான் தோட்டத்தில் வைத்திருக்கிறேன் - அது ஒரு அழகான அருமையான இடமாக இருந்திருக்கும் - அந்த எல்லா மரத்தின் கனிகளையும் நீங்கள் புசிக்கலாம், ஒன்றை புசிக்க கூடாது. தேவன் இந்த இடத்தில் ஒரு நிபந்தனையை கட்டளையை வைப்பது ஆச்சரியாமாக இருக்கிறதல்லவா? சரி, எல்லாம் இருக்குது, ஆதாம், எல்லா மரங்களின் கனிகளையும் புசிக்க அனுமதி இருந்தும், தேவனுக்கு கீழ்படியாமல் இருப்பதை தெரிந்துகொள்கிறான், அதைதான் பாவம் என்கிறோம். அது தேவனுக்கு கீழ்படியாமல் இருப்பதை குறிக்கிறது. அப்படி அவன் செய்தபோது, நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை அவன் புசித்த புசித்தான். ஜீவ விருட்சத்தின் கனியையும் புசித்தான், அதன் விளைவாக என்ன நடந்தது, அவன் வெளியே தள்ளப்பட்டான். ரோமரில் சொல்லப்பட்டிருப்பது சுவாரஸ்யமாக இருக்கிறது, அந்த ஒருமனிதனுடைய பாவத்தினால், உலகத்தில் பாவம் பிரவேசித்தது, பாவத்தினால் மரணம் வந்தது. அப்படின்னா இங்க சரீர பிரகாரமான மரணம் உண்டாகல, ஏன்னா அவ பாவம் செய்தப்பா சரீர பிடகாரம் மரிக்கவில்லை. இருந்தாலும், உடனடியாக ஆவியில் அவன் மரித்துபோனான், அப்பறம் மரணம், இயற்கை மரணம், அவனுக்கு உண்மையானதாக மாறினது.

இப்ப இங்க ஒரு பிரச்சனை இருக்குது: இப்ப மனுக்குலம் ஆதாம் மூலமாக இன்னும் பூமியில் தோன்றப்படவே இல்லை. அதனால அவன் பாவம் செய்தபோது, அது மனுகுலத்திற்குள் ஒரு வைரஸ் போல பரவினது. அந்த வைரஸ் குணப்படுத்த முடியாதது ஏன்னா அது நம்மை தேவனிடமிருந்து பிரித்து விடுகிறது. அவன் தேவனுடைய ஜீவனை இழந்துபோனான்; அவன் தேவனிடமிருந்து பிரிக்க பட்டான். நாம எல்லாரும் அந்த ஆக்கினைக்கு கீழாக பிறந்தவர்களாக இருக்கிறோம். இதுதான் கேட்ட செய்தியாக இருக்கிறது. ஆனா ஒரு நல்ல செய்தியும் இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** ஆமா, அந்த நற்செய்தி ஏன்னா? அதாவது, நாம எல்லாரும் ஆதாமின் அடிகளை பின்பற்றி பாவம் செய்திருக்கிறோம் என்பதை எல்லாருமே புரிந்துகொண்டோம். அநேகர் இதை இப்போது கேட்டுகொண்டிருக்கிறார்கள் அவர்கள் சிலர், தங்களை பெரிய பாவி என்ற பட்டியலில் வைத்திருக்கலாம், சரியா. சபைக்கு செல்கிறவர்களாக இருக்கிறவர்கள் நாங்க சின்ன பாவிகள்தான் என்று நினைத்து கொண்டிருப்பதை நினைத்தால் எனக்கு வருத்தமாக இருக்கிறது. அவர்கள் சின்ன பாவிகள் தான் எல்லாரும் அப்படிதானே இருக்கிறார்கள், அதனால நாம பரலோகம் போகலாம் என்கின்றனர். பாவம் எவ்வளவு ஆபத்தானது?

**பார்பர்:** பாவம் ரொம்ப ஆபத்தானது, ஏன்னா தேவன் அதை வெறுக்கிறார், அதை தேவனையும் நம்மை பிரிக்கிற ஒரு விஷயமாக இருக்கிறது. மேலும், அதாவது, அது ஒருவருடத்தின் நேஷினால் பூட் பால் லீக் மாதிரியானது, அது அருமையானதாக தோன்றிடும். ஒரு நபர் ஆல்மோஸ்ட் கோல் லைன்ன தொடறமாதிரி அடித்தான், அது போயிருந்தா அவங்கள் ஜெயிச்சிருப்பாங்க. அது ஒரு அடி குறைவாக இருந்தது. அதனால அவனால அதை அடிக்க முடியல. தேவன் நமக்காக வைத்திருக்கும் தரத்தை அடைய இந்த பூமியில் இருக்கிற எந்த மனுஷனாலும் மனுஷியாலும் ஈடுகட்டவே முடியாது. அதனால பாவம், அது பெரியது சிறியது என்று எப்படி இருந்தாலும், அது தேவனிடமிருந்து நம்மை பிரிக்கும்.

**ஆன்கர்பெர்க்:** சரி, இயேசு சொல்கிறார், அதாவது, உங்கள் பரலோக பிதா பூரணராய் இருக்கிறது போல நீங்களும் பூரணராக இருங்கள்." இப்ப, உங்க பாவத்தை பத்தி சொலுங்க, உங்களால சொல்ல முடியுமா, நான் பூரணமானவன் என்று? நா என்ன சொல்வேன்னு, கேட்டா, அதை உங்க மனைவியிடம் கேட்டு தெரிந்துகொள்ளுங்கள். உண்மையில், பூரணமானவன் என்று யாருமே கிடையாதுன்னு தான் நினைக்கிறேன். அப்படி இல்லைன்னா, நம்மால பரலோகம் போக முடியாது. தேவனிடமிருந்து நாம் பிரிக்கப்படுவோம். அப்ப நற்செய்தி என்ன சொல்கிறது? அதற்கான தீர்வு என்ன? ஒருவேளை நான்

இரட்சிக்கப்படாதவனாக இருந்தால் உங்ககிட்ட பேசும்போது உங்ககிட்ட நா கேட்பேன், இந்த உலகம் எந்த விதத்தில் என்னை இரட்சித்து இருக்கிறது? எந்த விதம் அது?

**பார்பர்:** சரி, அதற்கு அர்த்தம் மீட்பது, ஒரு பிடியில் இருந்து விடுவிக்கப்படுவது. ஆனா எதிலிருந்து நாம் விடுவிக்கப்பட்டிருக்கிறோம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இதுல குழப்பம் என்னன்னா நாம நரகத்திற்கு பாத்திரமாக இருந்தோம், இந்த நற்செய்தி இல்லாம நித்தியமாக தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டவர்களாக இருந்தோமா என்பதுதான். இதுதான் அந்த நற்செய்தி யோவான் 3:16, “தேவன் தம்முடைய ஒரே பேரான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுபோகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு அவரை தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.”

**ஆன்கர்பெர்க்:** இப்ப, ஒரு மேதையாக, அதாவது கிரேக்க பண்டிதராக, ஒன்றை தெரிந்துகொள்ள நினைக்கிறேன், விசுவாசம் என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன. வேதாகமம் இதை எப்படி கூறுகிறது? கிரேக்கத்தில் பலவிதமான அர்த்தங்கள் ஒரு வார்த்தைக்கு இருக்கிறது, உண்மைய சொன்னா நீங்களும் ஒரு கிரேக்க மேதைதான், அதனால இப்ப பதங்களின் தன்மையில் இதை பார்க்கலாம். விசுவாசம் என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன, இயேசு எனக்காக மரித்து என்

பாவங்களுக்கான விலைகிரையத்தை செலுத்தினார் என்பதை நம்பவேண்டும் என்று சொன்னபோது இதை செயல்படுத்தியிருக்கிறேன். அதற்கு என்ன அர்த்தம்?

**பார்பர்:** சரி, "விசுவாசம் என்ற வார்த்தை கிரேக்கத்தில் பீயதோ என்ற வார்த்தையில் இருந்து வந்தது. இந்த வார்த்தையின் அர்த்தம் அறிந்துகொள்ளுதல் - உணர்த்தப்படுதல், அந்த பத்தத்தை பயன்படுத்த விரும்பினால் - நாம் தலைகுனிந்து அதன் படி செய்ய ஆயத்தமாக இருக்கிறோம் என்பதை நம்புகிறோம் என்று வலியுறுத்துவதாக இருக்கிறது. ஒரு நபர் தான் நம்புவதாக சொல்லும் காரியத்தில் செயல்படாமல் இருந்தால், அவன் விசுவாசிக்கவில்லை என்று அர்த்தமாகும். அது எப்படி இருக்குன்னு கேட்டா 1800களில் ஒருவர் சொன்னார் நா ஒரு இறுகிய கயிற்றை வைத்து நயாகரா நதியை தாண்டிடுவேன் என்றா, அப்படியே செய்தார். ஆனா கூட்டத்தினர் என்ன சொல்வாங்கன்னு தெரியுமா. "எதெல், எதெல், கேமராவ கொண்டு வா. ஒருவர் நயாகராவில் இருந்து விழ போறதா பார்க்க போறோம் என்றார்கள்."

இப்ப அந்த மனுஷன் போய் நிற்கிறார், "என்னால இதை செய்ய முடியுன்னு எத்தனை பேர் நம்புகிறீர்கள்? எல்லாரும் கைகளை உயர்த்தினாங்க. அவர் அதை செய்தார். அவர் நடந்து இந்த பக்கம் வந்தார். இப்ப ஒரு வில் பெரோவ எடுத்துக்கிட்டாரு, அதுல நிறைய

வெயிட்ட வைத்தார், சுமார் இரநூறு பவுண்ட் கனத்தை அதில் வைத்தார், இப்ப கேட்டார், “என்னால இதை அந்த பக்கம் தள்ளிக்கொண்டு போகமுடியுன்னு எத்தை பேர் நினைக்கிறீங்க? அவ்வளவுதான், இவன் நயாகரா நதியில் இந்த பொதி மூட்டையோடு சேர்ந்து விழ போறான்னு நினைச்சாங்க. அதாவது, நாம இந்த மாதிரியான காட்சிகளை பார்த்தது கிடையாது. ஆனா நம்புகிறோம். இந்த முறையும், அவர் இந்த பக்கம் வந்து சேர்ந்தார். மேலும் அவர், “இப்ப, எத்தனை பேர் இந்த மூட்டை மேல ஒரு மனிதனை வைத்து என்னால தள்ளீட்டு போக முடியுன்னு நினைக்கிறீங்கன்னு கேட்டார். எல்லாருடைய கரங்களும் உயர்த்தப்பட்டது. அப்ப அவர் முன்னால வரிசையில் இருந்த உயர்த்தப்பட்ட கரத்தை பார்த்து, அவரிடம் சொன்னார், “ஹே நீங்கதா, சார். யாரு, யாரு, நானா? அவர் சொன்னார், நீங்க உங்க கரத்தை உயர்த்தினீங்கள்ள. நம்புகிறேன்னு சொன்னீங்கள்ள. நீங்க வந்த இந்த வீல் பேரோல உட்காருங்க இவங்களுக்கு செய்து காட்டலாம் என்றார்.” இல்ல, என்னோட கை சுலுக்கி இருக்குன்னு சொன்னார்.” திடீருன்னு எல்லாருடைய கரங்களிலும் சுலுக்கு வந்தது போல இருந்தது. ஏன்னா நம்புகிறேன் என்பது அந்த வீல் பெறோல உட்காருவதாக இருக்கிறது. தேவன் யார் என்பதை புரிந்துகொண்டேன் என்று சொல்லலாம், ஆனா அது ஆவிக்குரிய நம்பிக்கையாக இருக்காது. விசுவாசம் என்பது நாம்

புரிந்துகொண்ட உட்கிரகத்து கொண்ட அறிந்துகொண்ட ஒன்றின் அடிப்படையில் செயல்படுவதாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** சரி, இப்ப நாம இன்னொரு வார்த்தையை பார்க்க இருக்கிறோம் அதுதான் மனந்திரும்புதல். மனந்திருப்புதலில் ஒரு பகுதி உங்கள் மனதை மாற்றிகொள்வதாக இருக்கிறது. இயேசு தேவன் என்பதை நம்பாத ஜனங்கள் இரநூறு தேசங்களிலும் இருக்கத்தான் செய்கிறார்கள். தேவனை குறித்து உங்கள் மனதை நீங்கள் மாற்றிகொள்ளதான் வேண்டும். இயேசு யார் அவர் என்ன செய்தார் என்பதை பற்றிய உங்கள் கருத்தை மனதை நீங்கள் மாற்றிக்கொள்ள வேண்டும். நாம் அனைவரும் செய்த பாவங்களுக்காக அவர் மரிக்கும்படி தேவன் அவரை இந்த உலகத்திற்கு அனுப்பினார்.

அதை நீங்கள் புரிந்துகொள்ளாமல் இருக்கலாம், ஆனால் அதைதான் நாம் விச்வாசிக்க வேண்டும் என்று தேவன் கூறுகிறார் மேலும் என்னுடைய குமாரனை நீங்கள் விசுவாசித்தால் உங்களுக்காக அவர் செய்ததை நீங்கள் நம்பினால், அதற்கு அடுத்ததாக வருகிற வார்த்தை, இதுதான் நீதிமானாக்கப்படுவீர்கள். நீதிமானாக்கப்படுதல் என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?

**பார்பர்:** இப்ப, நீதிமானாக்கப்படுதல் என்ற வார்த்தை அருமையான வரத்தை, நான் பாவமே செய்யாதவன் போல ஆக்கிடும். அதுமட்டுமல்ல, இதற்கு ஒரு கதையையும் வைத்திருக்கிறேன்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா, அந்த கதையை எனக்கு சொல்லுங்க.

**பார்பர்:** சரி, ஸ்டீவன், சில வருஷத்துக்கு முன்னால,, பிளாரிடா ஜியார்ஜியா புட்பால் கேம் பார்க்க போயிருந்தான், என்னோட மகன், ஸ்டீவன். அப்ப, அவன்கிட்ட போன்ல நான் சொன்னேன், அதாவது, உனக்கு டிக்கட்டே கிடையாதுன்னு சொன்னே. ஆனா அவனுக்கு கிடச்சுது. என்னை கூப்பிட்டு சொன்னா எனக்கு டிக்கட் கிடைச்சிருச்சு. அதை எத்தனை ரூபாய்க்கு வாங்கினான் என்பதையும் என்னிடம் சொன்னான். அது ஒன்றிற்கு முப்பது டாலர்ன்னு நினைக்கிறேன், அது சரியான தொகையாகதான் தெரிஞ்சுது.

அவன் உள்ள போகும்போது யாரோ அவனை தடுத்து நிறுத்தி அவனிடம், "தம்பி, இந்த டிக்கட்டுகளுக்கு நீ எத்தனை ரூபாய் கேட்பேன்னு கேட்டிருக்காங்க. அதற்கு அவன் 50 டாலர் என்றான். அதாவது, அவன் ஒரு கல்லூரி மாணவன், விதியை மீறினான். ஒருவேளை, அதின் மூலமா அதிக பணம் பெறமுடியும் என்று அவன் நினைத்திருக்கலாம். அப்ப அந்த நபர், "உன்னை கைதி செய்கிறேன் என்று சொல்லி. அவன் கரங்களில் விளங்கு போட்டு, அந்த பட்டணத்தில் இருந்த சிறைக்கு கொண்டு சென்றிருகிரார்கள். இப்ப ஸ்டீவனின் நண்பர்கள் ஒருவனிடமிருந்து அழைப்பு வந்தது. அவன் என்னிடம், "Mr. பார்பர், " எனக்கு இத, சொல்ல வருத்தமாக இருக்கிறது, ஸ்டீவன் சிறையில் இருக்கிறான் என்றான்." எனக்கு சிரிப்பு வந்தது.

னா கேட்டேன், “சிறையில் அடைக்கிற அளவுக்கு அவன் புத்திசாலி இல்லையே. அவன் என்ன செய்தான் என்றேன். அவன் என்ன செய்தான்னு எனக்கு சொன்னான்.

உடனே நான், அங்கிருக்கும் காவல் அதிகாரியை அழைத்தேன். அந்த காவல் அதிகாரி தொலைபேசியில் என்னிடம் சொன்னார், “Mr. பார்பர், அவனை நான் விட்டு விடுவேன்.” அதற்கு நான், உங்களை பிடித்திருக்கிறது. ஏன் நீங்க அவனை விட்டுவிடுவீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் காலையில் இங்க வருகிற நீதிபதி, எனக்கு இந்த சட்டம் பிடிக்கவில்லை என்று சொல்லி அவன் மீது சுமத்தப்பட்ட குற்றத்தை ரத்து செய்திடுவார் என்றார். அதேமாதிரி, மறுநாள்காலை அந்த நீதிபதி வந்தார், அவர் சொன்னமாதிரியே, இப்ப நீ இருக்கிற இந்த நிலையை பார்க்கும்போது என்னை பொறுத்தவரை, நீங்க இங்க இருந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை என்றார். இதேயே மாம், வேதாகம ரீதியாக பார்க்கும்போது, நீங்க நீதிமானாக்கப்படுகிறீர்கள், அதாவது நீங்க பாவமே  செய்யாது போல நிற்ப்பீர்கள். அதுதான் நீதிமான் ஆக்கப்படுதல் என்பதற்கான அர்த்தம், தேவனோடு சரியான நிலையில் நிற்ப்பது. அதை பெற்றிட நாம் எதையும் செய்ய வேண்டியதில்லை, ஆனால் கிறிஸ்துவின் மூலமாக நாம் நீதிமான்கள் ஆக்கப்பட்டிருக்கிறோம்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா, ரோமர் 5:1 எனக்கு மிகவும் பிடித்த ஒன்று, “இவ்விதமாக நாம் கிரியைகளினால் அல்ல கிறிஸ்து இயேசுவிலுள்ள விசுவாசத்தினாலே நீதிமானக்கப்பட்டிருக்கிறோம். “இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம்.” இது, ஒரு அருமையான விஷயம், தேவன் சொல்கிறார் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் அவரோடு சமாதானம் பெற்றிருக்கிறோம்.

இப்போது, ஒரு இடைவேளை எடுத்துகொள்ளலாம். நாம் திரும்ப வந்ததும் அடுத்த வார்த்தையை பார்க்க இருக்கிறோம். வேதம் சொல்கிறது நாம் மனந்திரும்ப வேண்டுமாம். நீங்கள் விசுவாசிக்க வேண்டும். பிறகு மனந்திரும்ப வேண்டும். இது மாற்றுகருத்துடைய வார்த்தையாக இருக்கலாம், ஜனங்களுடைய கருத்துப்படி, “இதை தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள், எப்படி மனம் திரும்புவது; நான் தேவனையான அளவிற்கு நடந்து கொள்கிறேன் என்று எனக்கு எப்படி தெரியும்? நாம் திரும்ப வந்ததும் இதை பற்றிதான் பார்க்க இருக்கிறோம். தொடர்ந்து இணைந்திருங்கள்.

*****

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட். மீண்டும் வருக. இப்போது நாம் Dr. வேயின் பார்பருடன் பேசிகொண்டிருக்கிறோம், மிக முக்கியமான தலைப்பை பற்றிதான் நாம் பார்த்துகொண்டு இருக்கிறோம், ஒரு நபர்

இயேசு கிறிஸ்துவுடன் உறவை ஏற்ப்படுத்திட அத்தியாவசியமான காரியங்கள் என்ன? நீங்க கிறிஸ்துவை அறியாதவராக இருக்கலாம் உண்மையில் இது எப்படி என்பதை நீங்கள் அறிந்திட விரும்பிடலாம். நீங்கள் கிறிஸ்தவராக இருந்தால், நீங்களும் இதை கவனிக்க விரும்புகிறேன், ஏன்னா அநேக கிறிஸ்தவர்கள் கிறிஸ்து யார் என்பதை அறிந்துகொள்ளும் படியில் இன்னும் கால் வைக்காமல் இருப்பதை நினைத்து வருந்துகிறேன். உங்க தேவனை பற்றிய நிறைய அறிவு இருக்கிறது, ஆனா வேயின் சொன்னமாதிரி நீங்க, இன்னும் இயேசுவினுடைய வீல்பேரோல நம்பிக்கையோடு ஏறி அவருடைய கரத்தில் உங்களை ஒப்படைக்கல, அவரை நம்பவில்லை. சரி இப்ப, வேயின், நீங்க சொன்னத சுருக்கமாக் சொல்லுங்க, அதற்கு பிறகு அடுத்ததை நாம பார்க்கலாம், அடுத்தது, மனந்திரும்புதல் என்றால் என்ன?

**பார்பர்:** சரி, அதாவது, ஆதாம் ஆதியாகமம் 3ல் பாவம் செய்தான். வேதத்தில் இருந்து ஒன்றை புரிந்து கொண்டோம், நாம் எல்லாரும் பாவம் செய்து தேவனுடைய மகிமையை இழந்துவிட்டோம். ரோமர் 6:23, “பாவத்தின் சம்பளம் மரணம்.” இது கேட்ட செய்தி. அடுத்து அவர் சொல்கிறார், “ தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்.” நாம இதுவரைக்கு என்ன பார்த்துகொண்டிருந்தோம் என்றால், சில தீய செய்திகள் சொல்லப்பட்டு இருக்கிறது; அதாவது எல்லாரும் பாவத்தில்

பிறந்திருக்கிறோம். இன்றைய உலகில் காணப்படும் பிரச்சனை இதுதான். ஜனங்கள் இதை அது இது என்றெல்லாம் சொல்வாங்க. இல்ல, அது பாவம் என்கிற பிரச்சனை. அதை நாம் புரிந்துகொள்ளாத வரையில், தேவன் தமது பரிசுத்த ஆவியினால் வெளிப்படுத்தியதை அறிந்து கிறிஸ்துவுக்கு முன்பு பணியாத வரையில், நற்செய்தியின் மறுபக்கத்தை நம்மால் புரிந்துகொள்ளவே முடியாது. இயேசு நம் வாழ்வில் வரும்போதுதான் அந்த நற்செய்தி நடைபெற துவங்கிடும்.

**ஆன்கர்பெர்க்:** சரி. மனந்திரும்புதல் என்றால் என்ன?

**பார்பர்:** சரி, என்னை பொறுத்தவரையில், விசுவாசம் மனந்திரும்புதல் இரண்டும் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றது. சிலர் எது முதலாவது எது இரண்டாவது என விவாதிப்பார்கள். ஆனா முக்கியமான விஷயம் என்னன்னா, அது உண்மையான விசுவாசமா, அது உண்மையான நம்பிக்கையா இருந்தா, அது இருதய மாற்றத்தை மட்டும் உண்டாக்கிடாமல், மன மாற்றத்தையும் வாழ்க்கை மாற்றத்தையும் உண்டாக்குவதாக இருக்கும். என்னை பொறுத்தவரை இரண்டும் பிணைக்கப்பட்டு இருக்கிறது, அதாவது, இதை பற்றி விவாதிப்பதென்பது அர்த்தமற்ற செயல். ஒரு நபர் மனப்பூர்வமா கிறிஸ்துவுக்கு முன்பாக பணிந்து உண்மையாக விசுவாசித்தால் இது தானாக நடக்கும். அதுல என்ன இருக்கு? இது இங்க இருக்கிற விஷயம் அல்ல. அது இருதயத்தை சார்ந்தது. அந்த இருதயம்

அவருக்கு முன்பாக பணிந்திருந்தால் கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டு உள்ளே அழைக்கும்போது, அப்போது மனந்திரும்புதல் உண்டாகும் என்று தான் நான் சொல்லுவேன்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா, அது தேவன் உங்களுக்கு செய்திடும் கிரியையாகும். அதை நீங்கள் உருவாக்கிட முடியாது. சரி, எந்த அளவிற்கு நான் மனந்திரும்ப வேண்டும்? ஜனங்களுடைய கருத்து, “நா போதுமான அளவிற்கு மனம் திரும்பியிருக்கேனா? ஏன்னா நீங்க பேசறத பார்த்தா, அதாவது, நீங்க சொல்றத பார்த்த பாவத்தோடு ஏதோவொரு தொடர்பு இருப்பதாகத்தான் தோன்றுகிறது, இந்த மாம்சம் மற்றும் உங்க பாவம் கிறிஸ்தவராக இருந்தாலும் வாழ்நாள் முழுவதும் தொடர்புடையாதவே காணப்படலாம், ஏன்னா உங்களுக்குள் விருப்பங்கள் ஆசைகள் உண்டாகும். உங்க கேள்வியும் இதுதான, என்னுடைய மனமாற்றம் போதுமா? போதுமான விசுவாசம் எனக்கு இருக்கிறதா? எனக்கு அது எப்படி தெரியும்? அந்த நிச்சயம் எனக்கு எப்படி கிடைக்கும். வேயின், நா உண்மையா இரட்சிக்கப்பட்டிருக்கேனா?

**பார்பர்:** சரி, இதற்கான நிச்சயம் தேவ வார்த்தையில் இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் அதை குறித்து சாட்சி கொடுப்பவராக இருக்கிறார். ரோமர் 8:16 நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோமென்று ஆவியானவர் தாமே நம்முடைய

ஆவியுடனேகூடச் சாட்சி கொடுக்கிறார்." இது எல்லாமே தேவனுடைய வார்த்தையின் ஆவணங்களில் இருந்துதான் பெறப்படுகிறது. அதை பற்றி நான் யோசிக்கும்போது, என்னுடைய திருமணத்தை தான் நினைத்து பார்க்கிறேன். நா நடைபாதையில் நடந்துவந்தேன், டயானா ரொம்ப அழகா இருந்தா. அவளும் இறங்கி வந்தால் பிரசங்கியார் சொன்ன பல வாக்குறுதிகளை நான் அவருக்கு பின்னால சொன்னேன். அவர் என்ன சொல்கிறார் என்று எனக்கு எதுவும் புரியல. என்னை நான் எந்த விதிகளுக்கு உட்படுத்துகிறேன் என்றும் தெரியும். ஆனா எனக்கு தெரிந்ததெல்லாம் ஒன்றுதான், அதை நான் ஒப்புக்கொண்டு இருக்கிறேன். ஆனா திருமணமாகி நாற்பத்தி மூன்று வருடங்களாகிறது. அன்றைக்கு என்ன நடத்தது என்று அன்றைக்கு நான் தெரிந்துகொண்டதை விட இன்றைக்கு பல காரியங்களை நான் நன்றாக புரிந்துகொண்ட இருக்கிறேன். மேலும் ஜனங்களில் பலர், விசுவாசிகளாக அவர்கள் வந்தபோது, அதுதான் துவக்கம் என்பதை பலர் புரிந்துகொள்வது கிடையாது. அது முடிவல்ல. அதுதான் துவக்கம். அவைகள் வந்தபிறகு தங்களை அர்ப்பணித்த பிறகு அவர்களுக்கு எல்லாவற்றையும் புரிந்துகொள்வார்கள் அவர் யார் என்பதை புரிந்துகொள்வார்கள், அது எல்லாவற்றிற்கும் ஆரம்பமாக இருக்கும். அதிலிருந்து வளர ஆரம்பிக்கும். அது வளரும். ஓ, அடுத்த, நாள் நீங்க என்னெல்லாம் இன்னும் விட்டு குடுக்கலன்றத தெரிஞ்சுக்குவீங்க. ஆனா இது அவரை நம்புவதற்கான நேரமாக இருக்கிறது. அதோடு

எதையாவது நாம சேர்க்க விரும்பினா, நாம இன்னும் இரட்சிக்கப்படாம இருக்கிறோம் என்றாகிடும். இரட்சிப்பு என்பது கிருபையினால் உண்டாவது. அதுதான் ஒரே வழி. வேறு வழியே கிடையாது.

**ஆன்கர்பெர்க்:** ஆமா, நானும் இதை, யோசித்திருக்கிறேன், நீங்க கிறிஸ்தவராக இருப்பதால சில நேரங்கள்ல ஏதாவது ஒரு கிரியை செய்ய வேண்டும் என்று நினைக்கிறோம். நீங்க உண்மையாகவே இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்களா என்பதை உங்கள் வாழ்வில் இருந்து தெரிந்து கொள்ள முடியும் என்கின்றனர். சுவாரசயமான விஷயம் ஜான் கேல்வின் ஒரு முறை சொல்லியிருக்கிறார், அப்படி செய்ய முயற்சித்ததா வாழ்நாள் முழுதும் வேதனையில் தான் இருப்பீங்க, ஏன்னா யாரும் பூரணமான நிலையை இதுவரைக்கும் அடையவில்லை. அதனால தான் கேட்க்கிறேன், அந்த நிச்சயத்தை பெறுவதற்கான அடித்தளம் என்னது? அதை நம்மால் பார்க்க முடியலைன்னா, எதின் மீது கண்களை பதிய வைக்க வேண்டும்?

**பார்பர்:** அது உங்க வாழ்க்கையில் ஆவியானவரின் சாட்சி என்று நான் நினைக்கிறேன் மேலும், என்னை, கேட்டால் உங்கள் மனம் மாற்றம். அது இருதயத்தோடு தொடர்புடையது. உங்கள் இருதயம் மாறிவிட்டால், பேதுருவில் சொல்லப்பட்டது போல நாம் அவருடைய திவ்விய சுபாவத்தில் பங்குள்ளவர்களாவோம். அது முற்றிலும் மாறுபட்ட காரியம். இதற்கு முன்பு நம்மிடம் அந்த சுபாவம் இல்லை.

அதுதான் நமக்குள் அவருடைய இருதயம் உண்டாவது, நம்மக்குள் அவர் கிரியை செய்வது, நம்மை பிதாவிடம் இழுத்து செல்கிறது. அந்த பாதையில் நம்மை அவர் இழுத்துவிடுகிறார். அப்படியிருந்தால் தானாகவே, ஒரே இரவில், தேவன் நமக்கு வைத்திருக்கும் சித்தத்தின் தெய்வீக இடைபடுதலை நாம் பெற்றுகொள்ளுகிற அனுபவம் உண்டாகும்.

**ஆன்கர்பெர்க்:** உங்களுடைய முந்தைய நிலை இப்போதைய நிலையை சொல்லுங்கள். இப்படி உங்களுக்கு நடப்பதற்கு முன்பு நீங்க எப்படி இருந்தீங்க.

**பார்பர்:** சரி, முதல்ல இதெல்லாம் திறமைகளாக இருந்தது, பட்டியலை சரிபார்த்தல். இதை செய்தேன், அதை செய்தேன், இதை செய்தேன், அப்படி செய்தேன். நான் சரியாக இருக்கணும். அதற்கு பிறகுதான் யோசித்தேன் ஜெபம் தான் என்னை இரட்சித்தது என்று. ஜெபம் யாரையும் இரட்சிப்பது கிடையாது. இயேசுதான் நம்மை இரட்சிக்கிறவராக இருக்கிறார். அதில் ஜெபம் ஒரு பங்காக இருக்கிறது, அதாவது நாம் அவருக்கு முன்பாக வந்து நிற்கிறோம். ஆனா னா தொடர்ந்து செய்த ஜெபத்தையே செய்துகொண்டு இருந்தேன். மாதொரு செக் லிஸ்ட சரிபார்க்க முயற்சித்துகொண்டே இருந்தேன். ஆனா ஒரு உதயம் தோன்றியது, ஒரு நிமிடம் பொறு, நியாயப்பிரமாணம் நான் செய்கிற அனைத்தையும் குற்றப்படுத்துவதாக இருக்கிறது. அதை பற்றி

நாம் அப்பறமா பார்க்கலாம், ஆனா அந்த பிரமாணங்கள் கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டது. அப்பறம் அவர் இந்த உலகத்தில் வந்தார், அவர் படைத்த இந்த உலகம், அவர் நமது பாவ பாரத்தை தம்மீது சுமந்துகொண்டார். அவர் ஒரு மனிதனாக பூரண புருஷனாயிருந்தார், தேவ- மனிதன், நூறு சதவிகிதம் தேவ அவதாரமாக இருந்தார், சிலுவைக்கு சென்றார், நம்மால் செலுத்த முடியாத பாவத்தின் விலைகிரையத்தை நமது சார்பில் அவர் செலுத்தும்படி சென்றார், அதற்கு பிறகு உயிர்த்தெழுதல், அப்பறம் பரம் ஏறி செல்லுதல். அடுத்து தமது ஆவியானவரை நம்மோடு வாசம் பண்ணும்படி அனுப்புகிறார். அதுதான் சாட்சியாக இருக்கிறது. அவருடைய ஆவியானவர் நம்மோடு வாசம்பண்ணும்படி வருகிறார். அதுதான் நம்மீதுள்ள முத்திரை. அவர் இந்த பூமியில் பாவத்தை கண்டித்து உணர்த்தவும் நியாயத்தீர்ப்பு மற்றும் நீதியை குறித்து உணர்த்தவும் வந்தார். இப்ப எல்லாவற்றையும் நமக்கு அறிவிக்கிறவராக இருக்கிறார். இப்ப துரிதமாக சிக்கிக்கொள்ளும் ஒரு போராட்டத்திற்குள்ளாக நாம் நின்றுகொண்டு இருக்கிறோம்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா. நீங்க கிறிஸ்தவராக மாறின பிறகு உண்டாகும் அந்த போராட்டத்தை பற்றி கொஞ்சம் பார்க்கலாமா. ஒரு பெண் உங்க சபைக்கு வந்து உங்களிடம் சொன்ன ஒரு விஷயம் சுவாரயமானதாக இருந்தது. அது என்னவென்று எங்களுக்கு சொல்லுங்க. அடுத்த

வார்த்தையையும் பார்க்க விரும்புகிறோம். "பரிசுத்தமாக்கப்படுதல் என்றால் என்ன, சரியா?

**பார்பர்:** சரி, பரிசுத்தமாக்கப்படுதல், என்பதற்கு எனது விளக்கம், நாம் யார் என்று தேவன் சொல்லியிருக்கிறாரோ அந்த வாழ்க்கையை வாழ கற்றுகொள்ளுதல். இங்க நாம பேசிகொண்டிருக்கும் அனைத்து காரியங்களுக்கும் அடித்தளம் இதுதான். தேவனுடைய வார்த்தையின் மூலம் அவரை நாம் அறிந்திருக்கிறோம். ஆனா அவருடைய வார்த்தையின் மூலம் நாம் எப்படி இருக்கிறோம் என்பதையும் நாம் தெரிந்துகொள்ள துவங்கினோம். கொலோசெயரில் சொல்லப்பட்டது போல, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் நீங்கள் பூரணராக இருக்கிறீர்கள் என்று கூறியிருக்கிறார். இந்த பெண் என்னிடம் வந்து எங்கிட்ட சொன்னாங்க, வேயின், நா இரட்சிக்கப்பட்ட பிறகு நரகமே புறப்பட்டு வந்தமாதிரி இருக்குது," அதற்கு நான் சொன்ன முதல் பதில் என்ன தெரியுமா, "சாதாரண கிறிஸ்தவ வாழ்க்கைக்கு உங்களை வரவேற்கிறேன் என்றேன்." அதற்கு அவங்க கேட்டாங்க, "இதை பத்தி நீங்க எனக்கு சொல்லவே இல்லையே."

அது இதுவரைக்கும் இல்லாத ஒரு நிலையில் இருப்பதை நமக்கு காட்டுகிறது. ரோமரில், பவுல் கூறுகிறார், நீங்கள் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு நீதியை குறித்த கவலை இல்லாதவராக இருந்தீர்கள். அது பெரிய விஷயமா தோன்றல. ஆனா இப்ப நீங்க

இரட்சிக்கப்பட்டிருக்கீங்க, இது பெரிய போராட்டமா இருக்குது. மேலும் ரோமர் 6ல் மாம்சத்தோடு நமக்கு இருக்கும் போராட்டத்தை பற்றி அவர் சொல்லியிருக்கிறார். ஆமா, எனக்கு புதிய சுபாவம் உண்டாகிறது, நா கிறிஸ்துவின் சுபாவத்தில் பங்குள்ளவனாகிரேன். இருந்தாலும் மாம்சத்தோடு நாம் போராட வேண்டியிருக்கிறது. அந்த போராட்டமானது கிறிஸ்துவை நமது இருதயங்களில் நாம் ஏற்றுகொள்ளுகிற அந்த நேரத்தில் இருந்து ஆரம்பிக்கிறதாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** ஆமா, அதை பற்றி வருகிற நாட்களில் நாம் பேச இருக்கிறோம். ஒரு விசேஷித்த நிகழ்ச்சியில், நம் மாம்சம் பாவத்திற்கு அடிமைபட்டது என்பதையும், நாம் அதை மேற்கொள்ள தேவன் எப்படி உதவுகிறார் என்பதையும் பார்க்க இருக்கிறோம். ஆனா இப்ப நமக்கு ஒருநிமிடம் இருக்கிறது, வேயின். சில ஜனங்களுடைய எதிர்பார்ப்பு என்னன்னா, “நா இயேசுவை ஏற்றுகொள்ள விரும்புகிறேன். அந்த பரிசுத்த ஆவியின் வழிநடத்துதல் என் வாழ்வில் வேண்டும். என் பாவம் மன்னிக்கப்படனும். என்றிருக்கிறார்கள். இப்போதும் அவர்களை நீங்கள் ஜெபத்தில் நடத்திடுங்கள் உங்களுக்கு பின்பாக அவர்கள் அதை சொல்லட்டும், உண்மையில், உணர்ந்து செய்வார்களானால், தேவன் அவர்களை இரட்சிப்பார். கிறிஸ்து அவர்களுக்குள் வந்திடுவார். ஜெபிக்கலாமா.

**பார்பர்:** பிதாவே, இப்போது உமது சமுகத்திற்கு முன்பாக வருகிறோம். நான் ஒரு பாவி என்பதை அறிந்திருக்கிறேன். தேவனே, நான் பாவம் செய்தவன் என்பது ஒரு பக்கம் இருந்தாலும், நான், ஒரு, பாவி என்பதை மனபூர்வமாக ஒப்புகொள்ளுகிறேன். மேலும், ஆண்டவரே, அது எப்படி எனக்குள் வந்தது என்பதை வசனங்களில் இருந்து அறிந்துகொண்டேன். நான் ஆதாமில் பிறந்திருக்கிறேன். நான் பாவத்தின் சாபத்திற்கு கீழ் பிறந்த்திருக்கிறேன். ஆனாலும், பிதாவே, நீர் என்னை நேசிப்பதற்காக உமக்கு மனதார நன்றி செலுத்துகிறேன், நீர் உமது சொந்த குமாரனாகிய, இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பி சிலுவையில் மரிக்குபடி செய்து, என்னுடைய பாவத்திற்கான விலைகிரையத்தை செலுத்தி, அவர் நீதிமானாயிருந்தும், தேவனாயிருந்தும், எனக்காக பலியானார். பிதாவே, இப்போதே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என் இருதயத்தில் பிரவேசித்து என்னை இரட்சிக்கும்படி கேட்க்கிறேன், என் பாவங்களில் இருந்து என்னை மீட்டிடும், என் சுயத்திற்கு என்னை இரட்சித்திடும். உமக்கு நன்றி, பிதாவே, இரட்சிப்பு என்பது உண்மையில், மறுபிறப்பின் அனுபவமாக இருக்கிறது. உமக்கு நன்றி, பிதாவே. இயேசு கிறிஸ்துவில் நீர் எனக்கு அருளின உம்முடைய விலையேறப்பெற்ற ஈவுக்காக நன்றி. அவருடைய நாமத்தில் ஜெபிக்கிறோம், ஆமென்.

**ஆன்கர்பெர்க்:** ஆமென். தேங்க்ஸ், வேயின். வேதம் சொல்கிறது யாவனாகிலும் - அதாவது நீங்க - கர்த்தருடைய நாமத்தை தொளுதுகொண்டால். இந்த ஜெபத்தை நீங்கள் ஏறேடுத்திருந்தால், என்ன நடக்கும் தெரியுமா. கடைசி வார்த்தை: இரட்சிக்கப்படுவீர்கள். அதைதான் தேவன் உங்களுக்கு செய்திருக்கிறார். சரி, நேயர்களே, அடுத்த வாரம் நாம் அதை பற்றி பேச இருக்கிறோம், கிறிஸ்துவில் இருந்து துவங்கியதும் அவர் உங்களுக்குள் வந்திடுவார், அந்த பெண் சொன்னது போல, பூலோகமே இருண்டது போல இருக்கும். நமக்குள்ளாக நாம் எதனோடு போராடிடுவோம்? இப்படி பலவிதமான செய்திகள் பிரசங்கங்களை கேட்டிருந்தும், கிறிஸ்தவ வாழ்க்கை வாழ முயற்சிக்கும்போதும் தோல்வியடைவது ஏன்? நீங்க ஒரு கிறிஸ்தவர், கிறிஸ்து கூறுகிறவிதமாக வாழும் முயற்சியில் தோல்வியடைகிறீர்கள். வேயின் அதை பற்றி அடுத்த வாரம் பேசிட இருக்கிறார். இது அருமையானது, பிரமாதமானது, பயங்கரமான விபரங்களை தருகிறது. நீங்க தவறாமல் பார்ப்பீர்கள் என நம்புகிறேன், தொடர்ந்து பாருங்கள்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம்

செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.